





ஓலை 125| ஓசை 248| ஜூன் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## 'காலமொழி ஆராய்ச்சியாளர்' பேரா.ச.வையாபுரிப்பிள்ளை

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்

## பொருள்

தம்மால் செய்யமுடியும் செயலையும் அதைச் செய்வதற்கு ஏற்ற ஆற்றலையும் அறிந்து அதையே மனத்துள் சிந்தித்துச் செயலாற்றுவார்க்கு, முடியாதது ஒன்றும் இல்லை

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை!

பாவகை : சிந்தடி வஞ்சிப்பா




பூக்கள்தனைப் போற்றாக்குளிர் தென்றலுமது
ஊக்கந்தனைக் கொண்டேஉயிர் வாழ்தல்இலை;
நாக்குத்தனை வாழ்த்தாவெறும் பல்லும்பொடி
யாக்கும்என உணர்ந்தால் இதழ் பிழைக்கும் இதை
உணரும்நிலை கொண்டேமகன் தாயிற்சிறப்
புணர்தல்என போற்றல்கடன் அறிவாய்நிதம்
தாயிற்உயர் கோயில்இலை வையந்தனில்
நாய்ப்பிள்ளையும் நன்றாய் இதை அறியும்எனில்
ஆறறிவை
ஆரறிவாய்ப் பெற்றும் அவரவர் அன்னையின்
சீரறிந்தே வணங்கிப் போற்றல்
பேரறிவு மகனாவார் போற்றிட அறிகவே!

பாக்குத்தனை மதிக்காவெறும் வெற்றுஇலையோ
நாக்கும் அது சிவக்கும்என சுண்ணாம்பது
போக்குத்தனைக் காட்டும்நிலை வருதல்எனின்
நீக்கும்பெரும் பணியாய்ச்சிறு பிள்ளைக்குணம்
பெற்றேஉடன் பெற்றத்துணை தாயைப்புறம்
பற்றேஇலா பாங்கில்மனை யாளால்கழித்
தொதுக்கும்மகன் கோயில்என மறந்தால்அவன்
பிதுங்கும்விழிப் பிடுங்கல்தனி வழிதான்என
உணர்ந்தே
நயன்மை நின்றே நசிந்து போக
துயரை வாரிச் சுமப்பான்;
அயரா(து) அன்னையை அணைத்தே வாழ்கவே!




**இலக்கணக் குறிப்பு:**

(வஞ்சிப்பாவின் பொதுவான இலக்கணம்)

இரு சீரடி குறளடியாகவும், முச்சீரடி சிந்தடியாகவும் வரும். மூன்று அடிகள் முதல் பல அடிகள் வரும். பெரும்பாலும் தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி ஆகிய கனிச் சீர்களே வரும். அருகி நான்கசைச் சீர்களும் வரும். வஞ்சி அடிகளுக்குப் பின் தனிச்சொல் வரும். ஆசிரியச் சுரிதகத்தால் முடியும். ஆசிரியச் சுரிதகத்தின் ஈற்றயலடி (ஈற்றடிக்கு முன் உள்ள அடி) முச்சீர் பெற்றே வரும். இரண்டடிக்கோர் எதுகை பெற்று வருவதும் உண்டு. வஞ்சித்தளையுடன் வேறு தளையும் வரும் ஈற்றுச் சீர் ஏகாரத்தில் முடியும். இது தூங்கல் ஓசை கொண்ட பாவாகும்.

**நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்**

# காற்று

**பாவகை : கலிவெண்பா**

வெற்றிடம் இல்லாமல்
வெஃகி நிறைப்பாயே
பெற்றாய் வளியெனும் பேரே கவனமாய்ச்
சுற்றுவாய் ஓய்விலாமல் சுண்டுவாய்ப் பூக்களை
முற்றல் மரங்கள் முறித்தே நகர்வாய்.
கடலலை தன்னிலே காலாட்டி மகிழ்வாய்
உடலுக்குள் சென்றே உயிரோட்டம் தந்தே
மடக்கி வெளியே மணத்தை இழுத்தே
படர்ந்திடும் மேகத்தைப் பாந்தமாய்ச் சுற்றும்
பதமாய் அடிக்கப் பறக்கும் இலைகள்
இதமாய் தழுவியே இன்பம் தருமே
கதமதைக் கொண்டால் கதழ்வை அடையும்
வதத்தை நிகழ்த்தி வடிவைச் சிதைக்குமே.
காற்றால் இசையும் கழையில் பிறக்குமே
காற்றின் உணர்வால்
களிப்பும் நிறையுமே
காற்றே உலகையே காலின்றிச் சுற்றுமே
காற்றைக் கடவுளெனக் காண்.



கவிஞர் செ. கலைவாணி

# கவிதை துளிகள்



மிட்டாய்களின்
வடிவங்கள் மாறிவிட்டன
இன்றும் அதற்காகவே
சமாதானமாகின்றன
கள்ளமில்லா
குழந்தை மனங்கள்

எதிர்கால
சந்ததிகளின்
விதைகள்
இளைப்பாறுகின்றன
நமது செயல்களின்
நிழல்களில்

ஒவ்வொரு
நாளும்
கைகளில்
பூக்கள் கொடுக்க
புன்னகைத்து
பழகுங்கள்

தோட்டமெங்கும்
வாசனை உதிர்ந்தாலும்
கடமையை
செய்து விடுகின்றன
பூக்கள்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# தேடலில் ஒரு அமைதி

யார் எதற்கு ஏன் நாம் தினமும் கடக்கிறோம்
காரணம் இல்லாமல் கண்ணீரே மருந்தாக
தினம் புதுபுது அனுபவங்கள் புதுபுது நபர்கள்
புதுபுது பயணங்கள் புதுபுது புலமைகள்
புதுபுது சுற்றம் புது புது புரட்சி உரை
இதில் நாம் கொண்டு சேர்ப்பது
என்ன கொண்டு வந்தது என்ன
பலரும் மர்ம பின்னணியில் மாய ஒவ்வாமையில்
ஒரு முறையாவது அறத்தின் அடிப்படையில்
அவலம் இல்லாமல் தினமும் ஒரு தேடல்
ஒவ்வொருவர் மனநிலையும் எதிர்பார்க்கிறது
அந்த அமைதி எனும் உறவை.



கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்



8. விமலையார் இலம்பகம் .

"வருகவென் களிறென் றேத்தி
வாங்குபு தழுவிக் கொண்டாள்" ( 1911)
விசயை, "என் களிறே வருக"
நிசமான மகனைத் தழுவிக் கொண்டாள்
வசமான நந்தட்டன், பதுமுகனை வரவேற்றாள்
ருசியாக சமைத்து உணவு பரிமாறினாள்

தன் மக்களை கைகளால் தழுவினாள்
இன்மொழி கலந்து முகமன் மொழிந்தாள்
அன்புடன் அறுசுவை உணவு படைத்தாள்
இனிமையான நாட்கள் அவருடன் கழிந்தன

ஆறு திங்கள் தாயுடன் தங்கினான்
கூறினாள் அரசியல் நெறிமுறைகள்
"வீறு கொண்டு எழுவது வீரமல்ல
நீறு பூத்த நெருப்பாக இரு"

குறுநில மன்னர் மகளைக் கொள்ளுதல்
பெருநில ,மன்னர் மகளைக் கொள்ளுதல்
சரி என்று முன்னோர்கள் கொண்டனர்
பரிந்துரைத்தன வேத நூல்கள் எல்லாம்

தொன்மையான பகையை நெஞ்சிலே நிறுத்து
பொன்னாசை அடுத்த நாடுகளைக் கவருதல்
தொன்று தொட்டு வரும் பழக்கமல்லவா
கொன்றுபோட்டு நாடு பிடிப்பதும் உண்டு

இரு பகைவர் இருந்தால் இதைச்செய்
ஒருவரோடு நட்பு பாராட்டிப் பழகு
அவரை அவனோடு மோத விடு
முள்ளைக் கொண்டு முள்ளைக் களைதல்

ஒற்றரை ஒற்றரைக் கொண்டே ஆராய்தல்
கற்ற அமைச்சரை கண்போல் கருது
மந்திரி சுற்றத்தை அப்படியே நம்பிடாதே
தந்திரிகள் பார்த்து களை எடு

போர்க்கள வெற்றி மட்டும் வாழ்வாகாது
மார்தட்டி நிமிர்ந்து நிற்பது போதாது
ஓர் நாடு கல்வியில் மேம்படவேண்டும்
கூர் நோக்கும் மதி நுட்பம் அவசியம்

முல்லை கார் தோன்றினால் மலரும்
தாமரை ஞாயிறைக் கண்டால் மலரும்
மாமன் உன்னுடைய சீர்தோன்ற மலரும்
தாமதமின்றி அவன் சொல்படி நட ''
( மாமன்: கோவிந்தன், விசயை சகோதரன் )
''நீங்கள் கூறியதை நினைவில் கொள்வேன்
உங்களை விட்டு மீண்டும் பிரிகிறேன்
எங்களை வாழ்த்தி அனுப்புங்கள் அம்மா.''
''எங்கும் வெற்றி உமதே '' என்றாள்.

தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# கயமை

## அதிகாரம் : 108

முகத்தோற்றத்தில் கயவரும்
நல்லோர்போல் ஒப்புமையோரே.
அவ்வொப்புமையை வேறெந்த
இருவகைப்பொருளிலும் காணவியலாதாம்.

உறுதியுடைமை இஃதென்றறிந்தோரிலும்
கயவரே நற்பேறுடையோராம்.
கயவர்போலல்லாது நல்லோர்கள்
நெஞ்சில் கவலையிலாதோராம்.

கயவரும் தேவர்போன்றோரே
அஃதேனெனில் தேவர்போல்.
கயவரும் மனம்போனபோக்கில்
நடக்கும் தன்மையோராம்.

கீழ்மக்கள் தம்மிலுங்கீழோரை
காணின் அவரிலும்தாம்.
மேன்மையோரென தமக்குள்
இறுமாப்பு கொள்வராம்.

கீழ்மக்களின் ஒழுக்கக்காரணம்
பயமேயன்றி வேறில்லையாம்.
பொருளாசை யுண்டாயிருக்கவே
ஒழுக்கமும் சிறிதேயுண்டாகுமாம்.

கயவர்தாமறிந்த மறைபொருளை
பிறர்க்கு வலிந்துசொல்வதால்.
செய்தியறிவிக்கும் பறைபோன்றோர்
ஆகுவராம் அவர்.



கீழ்மக்கள் தம்மைவருத்திப்
பிடுங்குவோரல்லாத மற்றோர்க்கு.
உண்டபின்கழுவும் ஈரக்கையையும்
உதறிஉதவ மாட்டாராம்.

அணுகிக்கேட்க சான்றோர்
இரங்கி உதவுவராம்.
அடித்துப்பிடிங்கினால் மட்டுமே
கீழ்மக்கள் பயன்படுவராம்.

பிறனின் நல்லுடையிலும்
சுவையுணவிலும் பொறாமைகொண்டு.
வேண்டுமென்றே அவர்க்கு
வடுவுண்டாக்குவராம் கயவர்.

துன்பம்வருங்கால் கயவர்
விரைந்து விலையாக்க.
உரியவராவர் அஃதன்றியவர்
வேறெதற்கும் உரியவராகாராம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# தேவதை



தேவதைகள் ஒருபோதும்
பொன் அணிவதில்லை
குட்டியாய்
பொன் அணிந்திருக்கும் போதும்
குட்டி தேவதைதான்
மகள்

கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# பெற்றோர்

கண்ணீர் துடைக்க தாயும்
கை கோர்த்து நடக்க தந்தையும்
இருந்தாலே
வாழ்க்கை போதுமானது.

இன்பத்தில் தட்டிக் கொடுத்து
துன்பத்தில் தோள் கொடுத்து
துணை நின்றாலே
வாழ்க்கை போதுமானது.

உழைக்க கற்றுக் கொடுத்து
உயர கரம் கொடுத்து
தாங்கினாலே
வாழ்க்கை போதுமானது.

தடுமாறும் போதெல்லாம்
தூண் போல நிற்பது
எனது பெற்றோர்கள்.



கவிஞர் மோனிஷா

# ஓங்கல் வெண்குடை

வெண்கொற்றக் குடையின்கீழ் மன்னர் ஆட்சி ;
மெச்சிடும்நல் திறத்தாரே பொறுப்பில் வந்தார்!
கண்ணெனவே குடிமக்களைக் காத்து நின்றார் ;
களவுசூது கலப்பிலாமல் நீதி செய்தார் !
பெண்டிர்தம் பாதுகாப்பை உறுதி செய்தார் ;
பிழைசெய்தால் மகனையுமே தேர்க்கால் இட்டார் !
திண்மையுடன் தீயோரை அடக்கி ஆண்டார் ;
திறமையானோர் கண்ணுற்றே ஏற்றம் செய்தார் !

ஆள்வோருக் குத்துணையாய் அமைச்சர் குருமார் ;
அல்வழியில் போகவிடா புலவர் கூட்டம் !
கேள்விகேட்கும் மன்றத்தில் நேர்மைப் பதில்கள் ;
கெட்டவராம் ஆட்சியெனில் தூற்றும் அறிஞர் !
அந்நாளின் நீதிமன்றம் இன்றும் உண்டோ ;
ஆண்டவராய் ஆள்வாரின் நெஞ்சம் உண்டோ !
இந்நாளின் தீர்ப்பினிலே நீதி உண்டா ;
எழுத்தாளர் பேச்சாளர் உண்மை உண்டா !



தேர்தல்நாள் மக்களாட்சி கடமை அறிவீர் ;
சீற்றமுடன் தடுத்திடுவீர் தீயோர் வருகை !
ஓர்த்திட்டே தகுதியானோர் வரவைக் கொணர்வீர் ;
ஒழுக்கநெறி அரசியலார் வெல்லல் வேண்டும் !
பேர்கொண்டோர் பிழையெல்லாம் பொறுத்தல் வேண்டாம் ;
பிறந்திடட்டும் புத்துலகம் இளைஞர் வாரீர் !
ஊர்கூடி முடிவுசெய்யின் மாற்றம் உண்டே ;
ஒற்றுமையாய் கைஉயர்த்தின் ஏற்றம் இன்றே !

கவிஞர் ஆ. சு. கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# விலகத் தெரியாத எனது உயிர்

அன்பால் கவர்ந்தவளே
அரவணைத்து மகிழ்ந்தவளே
ஆசைகளைப் பகிர்ந்து
ஆதரவைத் தந்தவளே

இன்பத்தை நுகர்ந்து
இதயத்தில் நிறைந்தவளே
ஈர்த்திட்ட விழிகளில்
ஈகையை பொழிந்தவளே

உணர்வினில் உறவாகி
உரியவளாய் ஆனவளே
ஊக்கம் அளித்து
ஊரார் மெச்சிட வைத்தவளே

எண்ணங்கள் சிறகடிக்க
என்னுள் வாழ்பவளே
ஏற்றமது உன்னாலே
ஏமாற்றம் அடைந்ததில்லை

ஐயிரண்டு விரல்கள்
ஐக்கியமானது அன்பே
ஒருபோதும் விலகாது
ஒற்றிணைந்து வாழ்ந்திடு

ஓராயிரம் கனவுகள்
ஓரிரவில் நிறைவேறட்டுமே
உன்னை விட்டு
விலகத் தெரியாத எனது உயிர்



பிணக்கது வேண்டாம்
பிரிந்திட இயலாதே
இல்லறத்தில் இனிமை
இன்சுவையைத் தந்திடுமே

பிரிவதைத் தாங்குமா
பிள்ளைமனம் தூங்குமா
காலம் மாறினாலும்
நேசத்தில் மாறாதவளே

இளமை போனாலும்
முதுமையும் வரமாகுமே
நினைவுகள் எல்லாம்
நின்னைப் பற்றியே

கணநேரமும் மறவேன்
கண்ணீர் சிந்திட வேண்டாம்
காதலின் கருணையால்
விலகத் தெரியாத எனது உயிர்

இணைந்தே பயணிப்போம்
இறுதிவரை நாம்தானே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# அவனும் நானும்



கை கோர்த்து தோள் சாய்ந்து
அடி மேல் அடி வைத்து நடந்து
உலகை சுற்றி பார்க்க விரும்புகிறேன்
என் நிழலின் துணையாக வருவாயா?
காதோரமாய் கற்பனை கதை கேட்டு
கண் சிமிட்டும் நேரத்தில் முத்தமிடுவாயா?
மனம் விட்டு பேசும்
கண்ணாடியின் பிம்பமாய் இருப்பாயா?
இதழிலே சங்கீதம் வாசிக்கும்
இன்னிசை ஓசையா நீ?
கண்கள் பேசும் மொழியின்
அகராதி வரிசையா நீ?
காத்திருப்பதும் ஒரு விதமான அழகோ அழகு!
உன் உள்ளங்கையில் நான்!

கவிஞர் மோனிஷா

# பெண்கள்

எப்போதும்
அலுப்பதில்லை
அம்மாவின் பாசம்.
இன்னும் இன்னும்
பிடிக்கிறது
அப்பாவின் கொஞ்சல்.
சகோதரனின்
அன்புப்பிடிக்குள்ளிருக்க
ஏங்குகிறது மனம்.
தங்கைக்கு
இன்னொரு தாயாய்
இன்றுமிருக்க
ஆசை குறையவில்லை.
பாட்டியான பிறகும்
தன் தாய் வீட்டு
நினைப்பிலிருந்து
விட்டு மீள்வதில்லை
எந்தப் பெண்களும்!



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# ஈகைத் திருநாள்




எங்கள் திருநாளாம்
தியாகத் திருநாளாம்
அனைவரும் கூடும்
அற்புத திருநாளாம்.

அனைவரும் மகிழ்ந்திட
பலகாரங்கள் பகிர்ந்திட
உண்டு மகிழ்ந்திட
ஈமான் பெருகிட
வாழ்வு சிறந்திட
சிறுவர்கள் மகிழ்ந்திட
இனிய பெருநாள் பிறந்திட
புத்தாடை அணிந்திட
புது மணம் வீசிட
தியாகங்கள் நிகழ்ந்திட
மக்கள் நெகிழ்ந்திட
ஏழைகள் மகிழ்ந்திட
ஹஜ் கடமை நிறைவேற்றிட
அறபா நோன்பு போற்றிட
பெருநாள் தொழுகை தொழுதிட
மக்கள் கூட்டம் கூடிட
இன்பம் பொங்கிட
திருநாளை வரவேற்போம்.

பாலைவனமும் சோலைவனமாக
ஸம்ஸம் நீரூற்றும் பெருக
மக்கள் கூட்டமும் குவிந்திட
கஹ்பாவும் பூரணம் பெற்று
இறுதிக் கடமையும் நிறைவேற்றப்பட்டதே.

கவிஞர் எச். டீ. எச் பஹ்தா, கொழும்பு

# வீழ்த்தினான்

வன்புல சேயோன் கானம்
வறியோன் அகத்தை தீண்ட
மெல்ல எழுந்த முழக்கம்
ஆண்டைகள் அகம் மகிழ
வம்பு செய்யும் தம்பிரான் நம்பி.
குரலற் றவரின் குரலாக
ஒலித் தான் சேரமான்.
கொடுந்தமிழ் கோர்வையால்
கொடியோர் செருக்கு வீழ்த்தினான்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# உனை நினைத்தேன் வந்தாய்

பிள்ளைமையின் புனிததொணியில்
பேசினோம் நம் சிநேகதொணியில்
காலம்தான் கணக்கில்லாமல்
கனவுகள் தீட்டினோம் கவலையில்லாமல்.

நீ செல்வாய் வெற்றிச் சிகரங்கள் நோக்கி,
நான் நிலம் கண்டேன் நிழல்களின் போக்கி.
நீயே என் வீரனாய் விளங்கினாய்,
நானோ என் சாயலாய் தழுவினேன்.

நீ ஏறினாய் மேடையில் நிமிர்ந்தாய்,
நான் தூக்கத்தில் கவிதையாய் பிறந்தேன்.
நீ பேசினாய் பாராட்டுப் பேச்சில்,
நான் அமைதியில் அழுதேன் ஏச்சில்.

நட்பு மறந்தாய், பாசம் மறந்தாய்,
நான் நினைத்தே உனைத் தேடியேன்.
வாசலில் வந்து நிழலாய் நின்றாய்,
"நினைத்தேன் உன்னை" என்றாய் நெஞ்சோடு.

பிணக்கம் பொடிபட புன்னகை வந்தது,
பாசத்தின் புயலில் நம் உறவு கண்டது.
நீயும் நானும் நிழல் தேடி நின்றோம்,
நினைவில் பழைய தேனைச் சிந்தினோம்.

உனை நினைத்தேன் வந்தாய்
பாசம் மீண்டது, பிணக்கம் கண்டாய்!



கவிஞர் இ. தேவர்மன், இலங்கை

# வாழ்க்கை

வாழ்க்கையின் தத்துவம் வாழ்வின் சிறப்பே
ஊழ்வினை நம்மை ஊன்றி சுற்றிடுமே
பிறப்பு முதலாய் பிஞ்சு உள்ளமும்
சிறப்பின் உறவை பஞ்சாய் தேடுதே

சேர்க்கையின் சொந்தம் சேர்ந்தே வந்திடும்
பார்வையில் எளிய பாசமும் தெரி யுமே
தேவையும் நிறைந்த தேடுதல் உயர்வே
சேவையும் ஓடியே சேர்ந்தே வந்திடும்

பள்ளியின் நிகழ்வும் பலரது நினைவாமே
துள்ளியே விளையாடும் துணிவான பருவமே
கல்லூரி படிப்பில் கவனம் தேவையே
எல்லோரும் மகிழவே ஏட்டை முடிக்கணும்

பணமும் பொருளும் பகைமை வாழ்வாமே
குணமாய் சிறந்தால் குற்றமும் களையுமே
பணத்தால் வெல்லலாம் பண்படா இதயத்தை
குணமது உயர்வே குன்றின்மேல் விளக்காய்

தூக்கத்தை காண தூளியைத் தேடுதே
ஏக்கத்தைக் கூட்டி ஏளனம் பேசுதே
வறுமை வாழ்வ வளமை ஊற்றே
சிறுமை எண்ணி சிந்தை சோராதே

வெற்றியின் சின்னம் வென்றிடும் காலத்தை
கற்றிடும் மாண்பில் கணக்கின்றி சிறப்போம்
பெற்றிடும் பேறுகள் இனிதே கிடைத்தே
உற்றோர் துணையும் உறவில் ஓங்குமே



கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# விழியின்றியும் வழி பிறக்கும்

பிறப்பின் பொழுதே ஊனம்
குறையில்லை
சிறப்பாய் செயல்பட குறைபாடு
தடையில்லை
மனம் இருந்தால் ஆயிரம் வழிகள்
சினம் மிகுந்தால் அனைத்தும் பழிகள்
பார்வை இன்றியும் புலனால் அறியலாம்
தீர்வாய் என்றும் பலனை அடையலாம்
கண் இருந்தும் குருடராய் பலர்
கண்களை இழந்தும் சுடராய் சிலர்
முயற்சி என்றும் திருவினை ஆக்கும்
பயிற்சி நமக்கே உயர்வினைக் கொடுக்கும்
விழிகள் இன்றியும் உலகை ரசிக்கலாம்
வழிகள் வெற்றியும் தந்து நிற்குமே
ஊக்கம் தந்து குறையை நிறைவிப்போம்
ஏக்கம் கொண்டே மனமே தளராமலே
புலன்நலன் கொண்டோர் பொறுப்பற்றும் இருப்பர்
பலம் குறைந்தவர் சிறந்தே விளங்குவர்
ஒருகதவு அடைபட்டால் மறுகதவு திறக்கும்
ஒருபோதும் உள்ளம் சோர்ந்து போகாதீர்
ஐம்புலனில் நான்கும் செயலைத் தொடரும்
பைம்புனல் நீராடலாய் விலகிடும் இடரும்
பிறர் உதவியோடு செயலே புரிபவர்
சிறந்தே உலகில் வெற்றியோடு திரிபவர்
உள்ளம் விரிந்தால் வானையும் தொட்டிடலாம்
கள்ளமின்றி வாழ்ந்தால் இமயத்தையும் எட்டிடலாம்



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# எம் ஐயனே

நின் பாதம் பணிந்து
நின்றோன் விழி நீர்
மண்தொடும்முன்
மலர் சூடிய முடியில்
பிறை சூடிய எம்பெருமானே
ஊர்த்துவ தாண்டவத்தோனே

அபிநக்காளி தான் வியந்தாற் போல்
ஞாலம்தம் வியக்க யாமறிந்தோனே

யாம் பெற்ற இப்பேறு விழிகரைய
உளம்கரையுதே என் இறையே
நின் தயவில் இப்பேறு
எம்மைச் சேரும் காலம்வரை

நின் திருப்பாதக் கமலம்
தினம் பணிவேனெனை
தடுத்தாட் கொள்வாய்
ஒற்றியூர் படம்பக்கநாத ஐயனே!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# மனிதம்

வறுமையின் கோரப்பிடியில்
புத்தி பேதலித்து
அறைகூவல் விடும்
வயிற்றை அடக்க
வழியில்லாமல் திருடியவன்
விலையாக உயிர் கொடுத்தான்
ஆட்சியாளர் தயவில்
நாட்டைச் சுருட்டி
விண்ணில் பறப்பவர்
பின்னே செல்கிறது
மனிதம்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# கல்லூரியில் கனிந்த காதல்

காதல் அழியாத காவியம் ஆனது
கல்லூரிக் காதல் கசிந்துருகி கனியுமே
உயிருக்கு உயிராக நேசித்த காதல்
உயிர் மூச்சு விட மேலானது
இதயங்கள் இரண்டும் சேர்ந்து பேச
கண்கள் மௌனமாக இருந்த நொடி
அவளைப் பார்த்த நேரம் எனக்குள்
எத்தனை கனவுகள் அத்தனையும் அவளோடு
சேரும் நொடிக்காக காத்து இருக்கிறேன்
அவளுக்காக ஏங்கும் நான் நினைவுகளோடு



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# ஒரு மிடறு

ஒரு மிடறு நீர் போதும்
என் விடாய் தணிந்து விடும்.

ஒரே ஒரு சொல் போதும்
என் வெறுமை களைய,

ஒரே ஒரு பார்வை போதும்
என் உயிர் துளிர் விட,

ஒரே ஒரு தொடுகை போதும்
என் நம்பிக்கை நீள,

நீ நீயாக இருந்தால் மட்டும்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன், பெங்களூரு

# பிடித்திருக்கிறது

அவ்வப்போது எனக்குள்
வினவிக்கொள்கிறேன்
பிடித்திருக்கிறது என்று
மட்டும் சொல்லலாமே
ஏன் காரணங்களை
பட்டியலிடவேண்டும்
பிடித்திருக்கிறது என்ற
ஒற்றைப்பதத்தினையே
மொத்தக் காரணமாக
எடுத்துக்கொள்ளுங்களேன்
அவளைக்
கொண்டாடிக்கொள்கிறேன்
என்றைக்கும்
கொண்டாடுவேன்



கவிஞர் முனைவர். இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# நிலமகள்

பூக்களின் முகமாய் இருந்த
நிலமகள் இன்று பூகம்பத்தின்
அக்னி பார்வைகளாய்

காடுகளும் வயல் வெளிகளும்
பூமியின் மேற்பரப்பில்
அழியும் அவலங்களாய்

பசுமையின் அரவணைப்பில்
அமைதியாய் இருந்த பூமித்தாய்

கட்டிட காடுகளின் அணிவகுப்பில்
உருக்குலைந்து போய்
நோய்களின் முகவரியாய்

குளுமையின் அடையாளமாய் இருந்த
நிலமகள் இன்று நெருப்பின்
தணல்களாய் வியர்வையில்

மனிதனின் பேராசையால்
உலகம் இன்று ஊனமாய்

தகிக்கும் பூமியில் மனிதனின்
வாழ்வு மரணத்தின்
போராட்டமாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# கதை கதையாய்

உணர்வுகளோடு புதைந்திட்ட நேசக் கதை
உள்ளத்தோடு புதைந்திட்ட காதல் கதை
விழிகளோடு இணைந்திட்ட அன்புக்கதை
கனவுகளோடு கலந்திட்ட லட்சியக் கதை

மேலோர் கீழோரை சமமாக்கும் சமத்துவக் கதை
இல்லாதோருக்கு உடன் உதவிடும் கருணைக் கதை
தோல்வியுற்றவனை எழுப்பிடும் ஊக்கக் கதை
பாகுபாடு இல்லாமல் இருந்திடும் நட்புக் கதை

அனைவரையும் பாராட்டும் அன்புக் கதை
சேவை மனப்பான்மையுடன் வலம் வரும் கொடைக் கதை
கதைக்குள்ளே கதைத்திடும் கலை அது கதை
கதை கதையாய் அகிலமதில் பல கதைகளும் நடந்திடுமே



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# துக்கம் மறந்த தூக்கம்



துக்கம் மறந்துத்
தூக்கம் காணும்
இன்ப வாழ்க்கையில்
எல்லையற்ற மகிழ்ச்சியாக.

நெஞ்சம் முழுக்க
நேர்மையின் நிர்வாகம்.
காலமெல்லாம் நேசிக்கும்
காதல்மனையாளின் புன்னகை.

வெற்றிக்கான சின்னமான
உழைப்பின் உன்னதத்தில்
வெறி கொண்ட
உச்சத்தின் சாளரங்கள்.

மயக்கம் மறந்த
மமதைகள் களைந்தே.
போதைகளில்லா நாட்களுக்கான
புதியன புலர்ந்திட.

பிறந்த கெட்ட
பிறழ்வுகள் தொலைந்திட.
பின்னால் தொடரும்
பிழைகள் இன்றியே.

பகிர்ந்தளிக்க கொடை
எண்ணங்களும் தர்ம
சிந்தைகள் அருவியாக
இன்பம் முகிழ்க்கும்.

துக்கம் துறக்கும்
தூக்கமும் துறைமுகமாகும்
எண்ணக் கப்பல்கள்
எழில் ஓட்டத்தோடே..

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# அன்பென்பது

அன்பென்பது அன்புதான் ஆனால்
அன்பென்பது அன்பு மட்டுமல்ல
அது புரிதலின் சொரூபம்
அது உணர்தலின் அரூபம்
அது கொண்டாடுதலின் தாகம்
அது பேராழம் மிக்கதோர் சமுத்திரம்!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# கலங்காதே



கள்ளிப்பால் உனக்கிட்டே
கருவிலே கலைத்திடவே
கருங்கூட்டம் காத்திருக்கு
கலங்காதே.

பிஞ்சு என்றும் பாராமல்
பிணம் தின்னும் கழுகுகளாய்
பிறந்த இடம் தேடுதிங்கே
கலங்காதே.

காதல் வார்த்தைகள் பேசி
காலனாய் கழுத்திருக்கும்
காலங்கள் வீணடிக்கும்
கலங்காதே.

கைம்பெண் தானே என்று
கை வைக்க காத்திருக்கும்
கைக்கூலிகள் இங்குண்டு
கலங்காதே.

எள்ளி நகையாடி உன்னை
எகத்தாளம் காட்டி இங்கே
எட்டி உதைக்க பார்த்திருக்கும்
கலங்காதே.

விட்டில் பூச்சியாய் இல்லாமல்
விண்ணை சுற்றி வந்திடும்
விந்தையான விடை நீ
கலங்காதே.

பாரதி கண்ட புதுமையாய்
பாவைகளின் அருமையாய்
பாரில் வருவாய் பெருமையாய்
கலங்காதே.

கவிஞர் ஆனந்தி குவை. ஜெயராமன், சேத்தியாத்தோப்பு

# அன்பை விதைப்போம்

வஞ்சக எண்ணத்தில் வலைவிரிக்கும்
நஞ்செனும் மனதிலும் ஒட்டியிருக்கலாம்
நல்லதன் விதைகள்.
முகம்பார்த்து முன் ரசித்து
பின்விட்டுப் புறம் பேசும் உள்ளத்திலும்
உறைந்திருக்கலாம் உதவிடும் நேசம்.
பெண் பார்த்துப் பித்தாகி
வன்முறைக்குள் வழியமைத்து
வஞ்சியின் வாழ்வை புதைகுழிக்குள்
பொசுக்கிடும்
நயவஞ்சகனின் நெஞ்சிலும்
நிலைத்திருக்கும் தாய்ப்பாசம்.
கருவிக்குள் தன்னை தொலைத்து
காலத்தைத் தாண்டி ஓடும்
பணத்தைத் தேடும் இயக்கத்திலும்
பதுங்கியிருக்கலாம்
பாசத்திற்கான ஏக்கம்.
அவதூறுகளுக்குள்ளே ஆற்றலைத் தொலைத்து
அடுத்தவர் நகர்வை அசிங்கப்படுத்தும்
அறம் தொலைத்தோரிடமும்
கவனிக்கலாம் ஒழுக்கத்தின் ஒளிவு.
நிம்மதியைத் தொலைத்திடும்
நெஞ்சமுள்ளோர் நிறைந்திருக்கும்
சமூகத்தின் பயணத்தில்
நிழலென அன்பை விதையுங்கள்
நெகிழ்ந்திடும் மனதின் வேர்வையில்
பிறந்திடக்கூடும் பேரன்பின் வாசம்.





கவிஞர் இளையவன் சிவா

# சுற்றுச்சூழல்

நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கள் தொகையே
சுற்றுச்சூழல் மாசுபடவும் காரணம் ஆகிறதே!
காற்றும், நீரும் மனிதனின் முக்கிய
வாழ்வாதாரங்களின் அடிப்படையே!
நெகிழிப்பையும் நச்சுத்தன்மையே!

மக்காத தன்மையினால் மனிதர், விலங்குக்கும்
பெரும் கேடு விளைவித்தல் பெருங்கவலையே!
நெகிழிப்பை புதைத்தாம் மண் மாசுபாடாம்!
நெருப்பிலே போட்டாலும் காற்று மாசுபாடாம்
உடல் ஆரோக்கியம் குறைபாட்டு நோய் வளருதே

சுற்றுச்சூழல் கெட்டுப்போனால் சந்ததிக்கு அவலம்
ஆரோக்கியத்தை கருத்தில் கொள்ள வேண்டுமே!
நெகிழிப்பை தொழிற்சாலைகளை மூட வேண்டும்.
மரக்கன்றுகளை நட்டும் அதனை பராமரிக்க வேண்டும்.



கவிஞர் ஆ.கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# அகிலத்தில் முதல்வன்



உழைத்து களைத்து ஓய்ந்து போன
ஏழையின் வாழ்வே சோகம்தான்
அடுத்த வேலை சோற்றுக்கு
வழியில்லை உண்மைதான்.

தன் கையே தலை அணையாய்
கட்டாந்தரையே பஞ்சு மெத்தையாய்
படுத்ததும் உறங்கும் ஏழைதான்
கவலை இல்லை உண்மைதான்.

ஊரை அடித்து உலையில் போடும்
உத்தமராய் வேஷம் கட்டும்
கயவர்களின் காலமாய்
மாறித்தான் போனதே .

உண்மையும் நேர்மையுமே
வாழ்வென வாழும் மனிதன்
என்றுமே தோற்பதில்லை பூமியில்
இது உண்மையே.

ஏய்த்து வாழும் மனிதன் என்றும்
தூக்கம்  மறந்து போவானே.
பூமியில் பாரமாய்
துன்பமும் துயரமும்
வாழ்வே ஆகிப் போவானே.

சக மனிதனையும் நண்பனாய்
போற்றி வாழும் மனிதனே
ஏழையே ஆனாலும்
*அகிலத்தில் முதல்வனாய்*
என்றும் வாழ்வான் உண்மையே.

சொத்து சுகம் பணம் எல்லாம்
கூட வரும் உறவல்ல.
அன்பு கொண்டு வாழும் மனமே
இதயம் போற்ற வாழ்வானே.

கவிஞர் ஜேபபி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# எல்லாம் நீ எப்போதும் நீ

எனக்கு எல்லாம்
நீ!
காண்கின்ற காட்சியிலும்
நீ !
பேசும் எம் மொழியிலும்
நீ !
செவி நுழைந்திடும் ஒலியும்
நீ!
உயிர் தந்திடும் என் சுவாசம்
நீ !
உள்ளே துடிக்கும்
என் இதயம்
நீ!
இதழ் உதிர்க்கும்
என் புன்னகையில்
நீ!

எல்லாம் நீ!
நித்திரையில் நித்தமும்
நீ !
சிந்தையில் எப்போதும்
நீ !
பித்தானேன் உன்னால்
எல்லாம் நீ! எப்போதும் நீ!



கவிஞர் ஜனனி குமார், நாகப்பட்டினம்

# மேடைக்கூத்து

பிறப்பில் தொடங்கும்
அரகேற்றம்
ஆசையுடன் ஆழ்ந்திடும்
அகன்ற விழிகளுக்குள்
வீழ்ந்திடும்

நானென்று தொடங்கி
நீயாகி நானாகி
நாமுமாகிய பின்

உற்றுப் பார்த்தால்
உறவுகளின் நடிப்பும்
நர்த்தனமாடும் நாவின்
சுழற்சியும்

பெருந்திரள் எண்ணங்கள்
நின்றாடி நகர்ந்தவண்ணமே

அமைதிக்குள் ஆளும் மனம்
எண்ணி வைத்த வார்த்தைகளை
எடுத்து கோர்க்கையில்
உதிர்ந்தவை எல்லாம் ஒவ்வாமைக்
கூற்றிலே



மேடைக்கூத்தில்
சற்றே மென்சிரிப்பும்
மெல்லிய நீர்ப்படத்தில்
மிதக்கும் விழிகளின் சிமிட்டல்
சொன்னது

உதிர்த்து விடு இது ஒரு
நாடக மேடையென்று
உள்ளம் கதறியது.

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# வாழ்வும் வலியும்!

வாழ்க்கைப் பயணத்தில் வலிகள் இயல்பாகும்!
ஏழ்மை நிலையாலே ஏற்படும் வலிஅதிகம்!
தாழ்வு மனப்பான்மை தந்திடும் மனவலியை!
ஆழ்கடலில் மூழ்கினால்தான் கிடைத்திடும் நன்முத்தும்!
நிழலைப்போல் தொடர்ந்திருக்கும் வாழ்வில் வலிகளுமே!
வஞ்சிப்போர் தன்னாலே வலிமிகுமே நெஞ்சத்தில்!
கொஞ்சிப் பேசியே பின்னால் குழிபறிப்போர்
நம்பிக்கைத் துரோகத்தை நமக்குப் பரிசளிப்பர்!
காதலில் தோல்வியெனில் காலமெலாம் வலியுண்டு!
சோதனைகள் நேர்கையிலே தோல்வியெனில் வலியுண்டு!
உறவுகளின் பிரிவாலே உண்டாகும் வலிஅதிகம்!
கற்பிக்கும் பாடங்கள் வாழ்வியல் அனுபவங்கள்!
பற்றற்ற மனநிலைதான் வலிகளுக்கு மருந்தாகும்!
உளிதாங்கும் கற்கள்தான் உருப்பெறுமே நற்சிலையாய்!
சோதனைகள் பலவும்தான் சாதனைக்கு அடித்தளமாய்!
தடைகளைத் தாண்டி தளராமல் முன்னேற
விடை கிடைக்கும்! நல்வழி பிறக்கும்!
ஒவ்வொரு நாளும் நமக்காக புதுஉதயம்!
ஒவ்வொரு நொடியும் உனக்கான வாய்ப்பளிக்கும்!
இன்பத்தில் துன்பமும் துன்பத்தில் இன்பமும்
இறைவன் வகுத்த நியதியென்றார் கவியரசர்!
சிறுமகிழ்வு என்றாலும் சுவைமிகுமே வாழ்வினிலே!
வலிமிகுந்த வாழ்வே நம்வலியறியச் செய்திடுமே!
எதையும் தாங்கும் இதயம் நமக்கிருந்தால்
கோதிலா வாழ்வு கைகூடும்! வலிமறையும்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# கஞ்சிக்கலயம் சுமந்து

கஞ்சிக்கலயம் சுமந்து
கைபிடித்து நடக்கையிலே

செந்தூரபட்டுச் சேலைகட்டி
கன்னக்கதுப்பு செவக்க

கஞ்சிக்கலயம் சுமந்து
கைப்பிடித்து நடக்கையிலே

மேற்கால காத்துபட்டு
மேனி சிலிர்க்குதடி

பாதையில பூவிரிச்ச
தடமறியாமப் போகையிலே

நெருஞ்சிமுள்ளு என்னக்குத்தினப்ப
பதறிப்போயி பாவிமக

முந்தானையக் கிழிச்சு
கால்கட்டு நீபோட்டப்ப

முந்திரிக்கொட்டை போலவே
விசுக்குனு பூத்த

கண்ணீர் பூப்பட்டு
கால்வலி காணாமப்போச்சுதடி



அயிரைமீனு கண்ணுசுழட்டி
நீபேசிடும் சாடைப்பேச்சிலே

காதல் போதையேறி
உன்னையே சுத்துறேன்!

கவிஞர் யாழிசைச்செல்வா, தேனி மாவட்டம்

# உயிராய் வந்தவளே உணர்வில் கலந்தவளே!



நினைவில்வந்தவளே மனமதில் இருப்பவளே
வெண்நிலவாய் ஒளித்தரும் தேவதையே
காதலால் என்னைஉனதாக்கிக் கொண்டவளே
காரிகையே!பார்வையால் புதுமை படைப்பவளே

தேனிதழால் கன்னத்தில்முத்தமிட்டு நிற்பவளே
உறக்கத்தில் வருகின்றாய் கனவில் வருகிறாயே
கண்ணெதிரே தோன்றுகிறாய்கனவை கலைக்கிறாய்
வீசிடும்தென்றலாய் மேனியைஉரசிபோகின்றாய்

அருகினில் அமர்ந்தவளே இனிமையாய் பேசிடுவாய்
புன்சிரிப்பு சிரிப்பவளேஎன்னில் நீ கலந்தவளே
ஆனந்தஆசைகளின் ஆலாபனை நீதான் என்பேன்
உள்ளத்தில் குடிக்கொண்டதால் என்னையேமறக்கிறேன்

சொந்தமாகி விட்டவளே துன்பங்களைக் களைந்தவளே
காதலில் கட்டிப்போட்டாய் என்னைக் கவர்ந்திட்டாய்
நேசமதில் விழுந்தேன் அன்பினில் கவிழ்ந்தேன்
சரணடைந்தேன் நானும்இனியும் உன்னோடுநான்.

கவிஞர் இரா. சீ. பாலகுமார், சந்தோசபுரம் (சென்னை)

கால இடைவெளிக்குப்பின்
உறவும் நட்பும்
சந்திக்கும்
முதல் பார்வையில்
'உனக்கு ஆயுசு நூறு'

உரையாடலின் தொடர்ச்சியில்
'எப்பொழுதுமே
உன் நினைப்புதான்'

அருகருகே வசித்து
இரத்த உறவாய்
இல்லையெனினும்
உறவு சொல்லி அழைத்து
செய் தொழிலுக்காய்
பிரியும் கணங்களில்
'அடிக்கடி வந்துபோய்
கொண்டிரு'


ஒரே ஊர் ஒரே கல்லூரி
ஒரே வீதியில்
வசிப்பிடம்
என சுற்றி வந்த
நட்புக்கூட்டம் பேசுகையில்
'இப்படியே வாழ்நாள் முழுவதும்
போக வேண்டும்'



இதில் வைத்திருக்கின்ற
பாசம் உண்மைதான்
பிரிவின் சோகம்
உண்மைதான்

ஆனால்
அதற்கான
உதட்டு வார்த்தைகள்
உணர்வு மயமானவை
சாத்தியமற்றவை

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை



சாதி பிரச்சனைக்கு நீதியெல்லாம் இல்லை
இரு தரப்பினரும்
குற்றவாளிகள் தாம்
***

பேசவில்லையாம்!
எதோ 2 நாளுக்கே இந்த துள்ளல்,
நான் என்னோடு பேசியே
பல வருடம் ஆகிறது போ அப்படி.
***

ஆண்களை பயன்படுத்தி கொள்வதில்
பெண்களுக்கு நிகர்
பெண்களே
***

சுயநலத்தின்
உச்சம்
பெண்கள்
***

எது எப்படி கெட்டாலும்
எனக்கு மகனென்றால் இருபத்தைந்திலும்
மகளென்றால் இருபத்திமூன்றிலும்
மணமுடித்து வைத்து விடுவேன்
***

காற்றெங்கும் கொரோனா
காதெங்கும் இறப்பு
செய்தி!
***

நிலவு முகம் பார்த்து கொண்டிருந்தது
தலை சீவுவதற்குள்
குட்டையை குழப்பி விட்டான் ஒருவன்
***

உனக்கு மட்டும் தெரிந்தால் தான்
அது உண்மையான
ரகசியம்
***

எல்லா வர்ணமும் இரவுக்கும் உண்டு
இயற்கை என்னும் நியதியில் இழுக்கப்பட்டு
அடர்ந்த கருப்பை அகல விரிக்கிறது
***

ஒரு நொடி கூட
காலம் என்னை
விடுவதில்லை
***

வாட்ஸ்அப் லாஸ்ட் சீன் ஐ
வாழ்க்கையின் லாஸ்ட் சீன் ஆக்கும்
கொரோனா

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்



"என்ன அரசு, இன்னும் தூங்காமல் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?" தூக்கக் கலக்கத்தோடு எழுந்து வந்த திலக் கேட்டான்.

"ஒன்றுமில்லை" என்று சொல்லி விட்டு தந்தையின் பழைய நாட்குறிப்பை மடித்து பையில் வைத்துக் கொண்டான்.

"அவ்வளவு சீரியஸாக படித்துக் கொண்டிருந்தீர்கள். என்னிடம் சொல்ல வேண்டா மென்றால் உங்கள் விருப்பம்."

"அப்படி ஒன்றும் ஒளித்து மறைக்கிற பெரிய ரகசியம் ஒன்றுமில்லை இது. என் தந்தையின் அந்நாளைய டைரிபோல் எழுதி வைத்திருந்ததில் சில பங்கங்களை கிழித்து வைத்திருந்தேன். அதைத்தான் வாசித்துக் கொண்டிருந்தேன்."
"எவ்வளவு கஷ்டத்திலும் சுவாரஸ்யமான வாழ்க்கை. தீர்க்கமான குறிக்கோளோடு எவ்வளவு போராடியிருக்கிறார் என்று நினைக்கும்போது உள்ளுக்குள்ளே வலி எழும்புகிறது."

"ஆயிரத்தில் என்ன கோடியில் ஒரு பகுதி கூட இந்தப் போராட்டத்தை என் வாழ்க்கையில் சந்தித்து என்னால் எதிர்த்து நிற்க முடியுமா என்று நினைத்தால் உண்ணையாகச் சொல்கிறேன் பயமாகத்தானிருக்கிறது. அதே சமயம் எவ்வளவு ஆச்சரியங்களும் மலைப்புமாக இருக்கிறது."
"எப்படி இருந்து இன்று மும்பையை ஆட்டிப் படைக்கும் ஒரு பெரிய பணக்காரர் ஆனார் என்று எண்ணிப் பார்க்கும் போது 'வானம் ஒன்றும் தொடமுடியாத தூரத்திலில்லை' என்றே தோன்றுகிறது." கண்களில் பிரகாசம் மினுங்க தெளிவாக, தீர்க்கமாகப் பேசிய தமிழரசை ஆச்சரியத்தோடு, தூக்கம் கலைந்தவாறு கவனித்த திலக், "இவ்வளவு அழகாக தந்தையின் வாழ்க்கையைத் தெரிந்து கொண்ட நீங்கள் உங்கள் வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டும் எந்த ஏணிப்படியில் ஏறினல்

'வானம் வசப்படும்' என்பதை ஏன் புரிந்து கொள்ளாமல் போனீர்கள்…. அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது."

"ஒன்று கேட்கட்டுமா திலக்…" என்று எழுந்து நின்றான் அரசு. "உட்கார்ந்து கொண்டே பேசலாமே."
"இல்லை நிற்கிறேன். நீங்கள் தயாரிக்கும் மிருக உணவு உற்பத்தியிலே இறங்கி அதை லோக்கல் சப்ளை மட்டுமில்லாமல் ஏற்றுமதி என்றும் விரிவு படுத்தலாமே."

புன்னகைத்துக் கொண்ட திலக் "இன்னும் ஏன் கத்துக்குட்டியாகவே… அல்லது கத்துகுட்டித் தனமாகவே பேசுகிறீர்கள்."

"அரசு மிருக உணவு தயாரிப்பது என்கிறீர்கள். எந்த மிருகத்திற்கு உணவு தயாரிக்கப் போகிறீர்கள்? ரேஸ் கோர்ஸ் குதிரைக்கா? வீட்டில் வளர்க்கும் நாயினத்திற்கா? கோழித்தீவனமா? கால்நடை என்று சொல்லும் பசு மாட்டுத் தீவனமா? என்பதை முடிவு செய்யுங்கள்."
"……. ஓ.கே. நீங்கள் தயாரிக்கும் பிராய்லர் கோழியுணவு தயாரிப்பையே விரிவு படுத்தி முடிந்தால் எக்ஸ்போர்ட் ஆர்டர் மூலம் உலக சந்தைக்குக் கூட போகலாம்." என்றான் அரசு.

"அரசு திரும்பத் திரும்பச் சொல்கிறேன் என்று வருத்தப்படாதீர்கள். தீர்க்கமாக, திட்ட வட்டமாக, என்னால் முடியும், நான் செய்வேன் என்றும் ஆழ்மனப் பயிற்சி யோடு ஆளுமைத் தன்மையோடு பேசுங்கள். முடிந்தால்…. செய்யலாம் என்கிறீர்கள். முடியவில்லை என்றால் விட்டு விடுவீர்களா? அடுத்த வியாபாரத் தையும் முடிந்தால் பார்க்கலாம் என்று கோழைகள் மாதிரி கணக்குப் போடுவீர்களா?"

"வீரனாக உங்களை நீங்களே நீங்களே கஷ்டப்படுத்திக் கொண்டு செய்து காட்டுவேன் என்று பேசுங்கள்." என்று திலக் சொல்லும் போது அவனை தீர்க்கமாக பார்த்துக் கொண்டிருந்தான். "என்ன மௌனமாகி விட்டீர்கள்?"

"ஒன்றுமில்லை. ஜெயிப்பதற்கு எத்தனையோ விஷயங்கள் இருக்கிறது. ஆனால் ஜெயிக்க வேண்டும் என்ற ஆர்வம் மட்டும்தான் இருக்கிறது. வழியை இன்னும் தேடி கண்டுபிடிக்காமல் இன்னும் முட்டி நின்ற சுவரிலே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறேனோ என்று தோன்றுகிறது."

"எல்லாம் போகப் போகச் சரியாகி விடும். நீங்கள் இவ்வளவு ஆர்வமாக இருப்பதால் ஒன்று கேட்கிறேன். என் கப்போலி யூனிட் ஒன்று ஆரம்பிக்கும் பணியில் இருக்கிறது. அதைச் செய்கிறீர்களா? அதுவும் முழு மூச்சாக இறங்கி... " என்று கேட்டான்."

"கண்டிப்பாக.... எப்போது நாம் கப்போலி போகிறோம்." ஆர்வமாகக் கேட்டான் அரசு. "நாளை காலையில்" என்றான் திலக்.



தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

# 'காலமொழி ஆராய்ச்சியாளர்' பேரா.ச.வையாபுரிப்பிள்ளை

## கட்டுரை

### பிறப்பு

நெல்லை மாவட்டத்தில் உள்ள சிக்கநரசய்யன்பேட்டை என்ற ஊரில் 1891 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதி சரவணப்பெருமாள் - பாப்பம்மாள் தம்பதிக்குப் பிறந்தார்.

### கல்வி


பேரா. எஸ். வையாபுரிப்பிள்ளை

பாளையங்கோட்டை புனித சவேரியர் பள்ளியிலும், திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரியிலும் பிறகு சென்னை கிறிஸ்துவக் கல்லூரியிலும் படித்துப் பட்டம் பெற்றார். அந்த ஆண்டு சென்னை மாகாணத்திலேயே தமிழில் மிக அதிக மதிப்பெண்கள் பெற்று "சேதுபதி தங்க மெடல் (பதக்கம்)" பெற்ற பெருமைக்குரியவர் ஆனார். தமிழில் ஆர்வம் அதிகமிருந்தும் வையாபுரிப் பிள்ளை திருவனந்தபுரம் சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் பயின்றார்.

### தமிழ் ஆய்வு:

வழக்கறிஞராகப் பணியாற்றி வந்த காலத்தில், வையாபுரிப் பிள்ளை எழுதி, வெளிவந்த பல கட்டுரைகளும் இலக்கிய ஆய்வுகளும் அவரை அறிஞர்கள் மத்தியில் பேசப்பட வைத்தன. உ.வே.சாமிநாதய்யருக்குப் பிறகு பழந்தமிழ் இலக்கியங்களைத் தொகுத்து, ஆய்வு செய்து வெளியிட்ட பெருமை எஸ். வையாபுரிப் பிள்ளையைத் தான் சாரும். ஓலைச் சுவடிகளைப் பதிப்பித்ததுடன் நிற்காமல் அந்த இலக்கியங்களுக்குக் கால நிர்ணயம் செய்ததிலும் வையாபுரிப் பிள்ளைக்குப் பெரும் பங்கு உண்டு.

திரு.வில்சன், இதழாசிரியர்

தமிழ்த்துறைத் தலைவர்: வையாபுரிப் பிள்ளை திருவிதாங்கூர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராக இருந்த காலத்தைப் பொற்காலம் என்று கூறுவார்கள்.

இரா. பி. சேதுப்பிள்ளையைப் போலவே கம்பனின் கவிநயத்தில் தன்னைப் பறிகொடுத்த வையாபுரிப் பிள்ளை, "இரசிகமணி" டி.கே.சியுடன் இணைந்து திருநெல்வேலியில் கம்பன் கழகத்தை உருவாக்கியதில் பெரும்பங்கு வகித்தார். மகாகவி சுப்பிரமணிய பாரதி மற்றும், வ. உ. சிதம்பரம்பிள்ளை ஆகிய இருவரிடமும் வையாபுரிப் பிள்ளைக்கு நெருங்கிய அறிமுகம் இருந்தது.

**வீடு நூலகம்:**

வையாபுரிப் பிள்ளை தனது வீட்டில் இருந்த நூலகத்தில் மட்டும் 2,943 புத்தகங்கள் இருந்தன. அதுமட்டுமல்லாமல் ஆங்கிலம், தமிழ், பிரெஞ்சு, ஜெர்மன், மலையாளம் போன்ற மொழிகளிலான குறிப்புகளும், ஓலைச்சுவடிகளும் நூற்றுக்கணக்கில். அவை அனைத்தையும் கொல்கத்தாவில் இருந்த தேசிய நூலகத்துக்கு நன்கொடையாக அளித்துவிட்டார் வையாபுரிப் பிள்ளை.

**இயற்றிய நூற்கள்:**

1930 - ஆராய்ச்சி உரை தொகுப்பு, ஆசிரியர் வெளியீடு
1944 - சிறுகதை மஞ்சரி, தினமணி வெளியீடு
1946 - Research in Dravidian Language, Madras Premier Co., Madras
1947 - இலக்கியச் சிந்தனைகள், பாரி நிலையம்
1949 - தமிழர் பண்பாடு, தமிழ்ப் புத்தகாலயம்
1950 - கம்பன் ஆராய்ச்சிப் பதிப்பு, கம்பன் கழகம், காரைக்குடி
1951 - உரைமணிமாலை, ஆசிரியர் பதிப்பு
1952 - இலக்கிய தீபம், பாரி நிலையம்

**இயற்றிய நூற்கள்:**

1952 - இலக்கிய தீபம், பாரி நிலையம்
1952 - இலக்கிய உதயம் (பகுதி 2), தமிழ்ப் புத்தகாலயம்
1954 - இலக்கிய மணிமாலை, தமிழ்ப் புத்தகாலயம்
1955 - கம்பன் காவியம், தமிழ்ப் புத்தகாலயம்
1956 - இலக்கணச் சிந்தனைகள், பாரி நிலையம்
1956 - திராவிட மொழிகளில் ஆராய்ச்சி, தமிழ்ப் புத்தகாலயம், இரண்டாம் பதிப்பு
1956 - History of Tamil Language & Literature, NCBH
1956 - சொற்கலை விருந்து, பாரி நிலையம்
1957 - காவியகாலம், தமிழ்ப் புத்தகாலயம்
1958 - இலக்கிய விளக்கம், தமிழ்ப் புத்தகாலயம்
1958 - ராஜி
1959 - தமிழ்ச் சுடர்மணிகள், பாரி நிலையம், மூன்றாம் பதிப்பு
1959 - அகராதி நினைவுகள், தமிழ்ப் புத்தகாலயம்
1960 - தமிழின் மறுமலர்ச்சி, பாரி நிலையம், நான்காம் பதிப்பு

**பதிப்பித்த நூல்கள்:**




01. மனோன்மணியம், 1922
02. துகில்விடு தூது, 1929
03. நாமதீப நிகண்டு, 1930
04. அரும்பொருள் விளக்க நிகண்டு, 1931
05. களவியற்காரிகை, 1931
06. கம்பராமாயணம்-யுத்த காண்டம்1-3 படலம்), 1932
07. குருகூர் பள்ளு, 1932
08. திருக்குருங்குடி அழகிய நம்பி உலா, 1932
09. தினகர வெண்பா, 1932
10. நெல்விடு தூது, 1933
11. தொல்காப்பியம்-(பொருளதிகாரளம, இளம்பூரணம்), 1933
12. திருமந்திரம் (சேர்ந்து பதிப்பித்தது), 1933

திரு.வில்சன், இதழாசிரியர்

**பதிப்பித்த நூல்கள்:**

13. திருமுருகாற்றுப்படை (சேர்ந்து பதிப்பித்தது, புதிய உரையுடன்), 1933
14. கம்பராமாயணம்-பால காண்டம் (1-7படலம்), 1933
15. பூகோள விலாசம், 1933
16. திருப்பணி மாலைகள் (தென்திருப்பேரை, திருக்கோளூர்),1933
17. மூப்பொந்தொட்டி உலா, 1934
18. பொதிகை நிகண்டு, 1934
19. இராஜராஜதேவர் உலா, 1934
20. தொல்காப்பியம்-பொருளதிகாரம் (நச்சினார்க்கினியம்),1934
21. இராமலிங்கேசர் மீது பணவிடு தூது, 1934
22. மதுரைக் கோவை, 1934
23. தெய்வச்சிலையார்விறலிவிடு தூது, 1936
24. புறத்திரட்டு, 1938
25. கயாதாரம், 1939
26. சங்க இலக்கிய பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்), 1940
27. சீவக சிந்தாமணி, 1941
28. சாத்தூர் நொண்டி நாடகம், 1941
29. நவநீதப் பாட்டியல் - உரையுடன், 1943
30. திருமுருகாற்றுப்படை-பழைய உரை, 1943
31. நான்மணிக்கடிகை, 1944
32. இன்னா நாற்பது, 1944
33. திரிகடுகமும் சிறுபஞ்ச மூலமும், 1944
34. இனியவை நாற்பது, 1949
35. இராமப்பய்யன் அம்மானை, 1950
36. முதலாயிரம், 1955
37. திருவாய்மொழி
38. கொண்டல் விடு தூது

**மறைவு:**

வையாபுரிப் பிள்ளை 1956 ஆம் ஆண்டு பிப்ரவரி 17 ஆம் தேதி தனது 65-வது வயதில் இயற்கை எய்தினார்.

**நன்றி**

https://www.dinamani.com/specials/kalvimani/2014/Dec

திரு.வில்சன், இதழாசிரியர்

## நாளை நமதே

# சிலநேரம்

# உடைந்து போவது கூட

# புதிய மாற்றத்திற்காகதான்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com